கோவிட் -19 -ஐ எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகளைத் தழுவுதல்

# வீட்டுவசதி மற்றும் வாடகைக்கு குடியிருப்பவரின் உரிமைகள்



## 1 வாடகை

**உங்கள் குத்தகை ஒரு ஒப்பந்தம் என்பதால் நீங்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டியது** முக்கியமாகும்.அதாவது உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேதிகளில் நீங்கள் உங்கள் வாடகையைச் செலுத்த வேண்டும்.

**உங்களால் வாடகை செலுத்த முடியாவிட்டால்:**

- உங்கள் வீட்டின் உரிமையாளரிடம் பேசுங்கள்; நீங்கள் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியும்.
- இலவச ஆலோசனைக்கு வீட்டுவசதிக் குழுவைத் தொடர்புகொள்ளவும். உங்களுக்கு அருகிலுள்ள வீட்டுவசதிக் குழுவைக் கண்டறிய, RCLAQ இணையதளத்தைப் பார்வையிடவும் (www.rclalq.qc.ca/comites-logement/) அல்லது 514-521-7114 என்ற எண்ணை அழைக்கவும்.

**நீங்களும் வீட்டின் உரிமையாளரும் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியவில்லை என்றால்,** அவர்கள் உங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கலாம்.நீங்கள் வாடகை செலுத்தவில்லை என்பது நீதிமன்றங்களுக்குத் தெரியவந்தால், வீட்டை மீண்டும் தன்வசமாக்குதல் அல்லது வாடகைக்குக் குடியிருப்பவரை வெளியேற்றுதல் ஆகியவற்றுக்கு அதிகாரமளிக்கும் அனைத்து முடிவுகளும் அல்லது தீர்ப்புகளும் பொது சுகாதார அவசரநிலை முடிந்தபிறகு மட்டுமே நடைமுறைக்கு வரும்.

- இந்த வகையான முடிவு அல்லது தீர்ப்பை நீங்கள் பெற்றிருந்தால், நீங்கள் உங்கள் வீட்டிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டியதில்லை.
- மார்ச் 17, 2020-க்கு முன் வீடு வேறொருவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் மட்டுமே வாடகைக்குக் குடியிருப்பவர் வெளியேற்றப்படலாம், மற்றும் புதிய வாடகைதாரர் வளாகத்தின் உடைமையைப் பெறுவதை தீர்ப்பு தள்ளிவைப்பு தடை செய்கிறது.

## 2 ஹைட்ரோ கியூபெக் மற்றும் எனர்ஜிர்

வாடிக்கையாளர்கள் கட்டணங்களைச் செலுத்தாத இடங்களில் **சேவைத் துண்டிப்புகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என ஹைட்ரோ கியூபெக் மற்றும் எனர்ஜிர் அறிவித்துள்ளது.** மின்சாரம் மற்றும் இயற்கை எரிவாயு சேவைகள் அனைவருக்கும் தொடர்ந்து கிடைக்குமாறு செய்யப்படும்.

**உங்களால் பில் கட்டணம் செலுத்த முடியாவிட்டால்:**

ஒரு கொடுப்பனவு ஏற்பாட்டை அமைப்பதற்கு தயவுசெய்து அவர்களை அழைக்கவும்:

ஹைட்ரோ கியூபெக்: 514-385-7252

அல்லது

எனர்ஜிர்: 1-800-563-1516

## 3 பூச்சிக் கட்டுப்பாட்டுச் சேவைகள்

**பூச்சிக் கட்டுப்பாட்டுச் சேவைகள் அவசியமெனக் கருதப்படுவதால் அவை தொடர்ந்து செயலாக்கப்படுகின்றன,** ஆனால் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட வேண்டும். ஹவுசிங் யூனிட்டுக்குள் பூச்சிக் கட்டுப்பாளர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாடகைக் குடியிருப்பாளர்கள் அனுமதிக்க வேண்டும்.

**பொது சுகாதார சுய தனிமைப்படுத்தல் ஆணையின் கீழ் இல்லாதவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்:**

### பூச்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்:

பூச்சிக் கட்டுப்பாட்டாளர் பரிந்துரைத்தவாறு ஹவுசிங் யூனிட்டை தயார்படுத்தவும்.

### பூச்சிக் கட்டுப்பாட்டு நடைமுறையின் போது:

- என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்து, வாடகைக் குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறலாம். எனவே, பூச்சிக் கட்டுப்பாட்டாளர் பரிந்துரைக்கும் காலத்திற்கு நீங்கள் வீட்டை விட்டு வெளியேறுவது நியாயமானதாக இருக்கும்.
- பயன்படுத்தப்படுகின்ற பூச்சிக் கட்டுப்பாட்டுத் தயாரிப்புகள் காரணமாக நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், பின்வரும் பொது சுகாதாரப் பரிந்துரைகளை நீங்கள் பயன்படுத்த வேண்டியது முக்கியமாகும்:

### நடைமுறைகளுக்குப் பிறகு:

- உங்கள் வீட்டிற்குள் இருக்கும் காற்றை வெளியேற்றவும் (குறைந்தபட்சம் 15 நிமிடங்களுக்கு சன்னல்களைத் திறந்து வைக்கவும்).
- அதிகமாகத் தொடும் பகுதிகளைச் சுத்தம் செய்து கிருமிநீக்கம் செய்யவும் (உ.ம். கதவின் கைபிடிக் குமிழ்கள், சுவிட்சுகள்).
- பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்ட பகுதிகளை வாடகைக் குடியிருப்பாளர்கள் குறைந்தபட்சம் 48 மணிநேரத்துக்குத் தொடக் கூடாது.



உங்கள் கைகளைக் கழுவவும்



சுவாச சுகாதாரம்




உடல் இடைவெளி

Tamil

Québec

CIUSSS CSMTL - DC - 2020 - 016

**பின்வரும் நிகழ்வுகளில் மேலே சுட்டிக்காட்டப்பட்ட நடவடிக்கைகளுடன் சேர்ந்து நீங்கள் பின்பற்ற வேண்டிய பிற அறிவுறுத்தல்கள்:**

- ✓ **நீங்கள் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தால்.**
- ✓ **பின்வரும் அறிகுறிகளில் ஏதாவது ஒன்று உங்களுக்கு இருந்தால்:** காய்ச்சல், இருமல், மூச்சு விடுவதில் சிரமம், குமட்டல், வாந்தி, தலைவலி, தசை வலிகள், வயிற்றுப்போக்கு, அதிகமான களைப்பு, வாசனை அல்லது சுவையுணர்வு இழப்பு.
- ✓ **கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது சுய** தனிமைப்படுத்தலில் இருக்கின்ற ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால்.

பூச்சிக் கட்டுபாட்டு வேலை நடந்துகொண்டிருந்தாலும் கூட, வீட்டில் சுய தனிமைப்படுத்தலைக் கடைப்பிடிக்குமாறு சாண்டி பப்ளிக் கேட்டுக்கொள்கிறது.

**பூச்சிக்கட்டுப்பாட்டு நடைமுறைக்கு முன்:**

தெரிவிக்கவும். இந்தச் சூழலில் மாற்று நடைமுறைகள் பயன்படுத்தப்படலாம் (உ.ம். பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க வெப்பச் சிகிச்சை, அல்லது நடைமுறையை ஒத்திவைத்தல்).

**நடைமுறைகளின்போது:**

**பூச்சிக் கட்டுப்பாட்டாளர் உள்ளே வரத் தேவைப்படாத ஒரு காற்றோட்டமான அடைக்கப்பட்ட அறையில் தங்கவும், அல்லது கொல்லைப்புறம் அல்லது பால்கனி போன்ற, வீட்டின் தனியான ஒரு பகுதியில் தங்கவும்.**

## 4 வீடு தேடுதல் மற்றும் பார்வையிடல்கள்

**வீட்டின் உரிமையாளர்களும் வாடகைக்குக் குடியிருப்பவர்களும் வீடுகளுக்கு நேரில் சென்று பார்வையிடுவதைத் தவிர்த்து, இணைய வழிமுறைகள் மற்றும் வருங்கால வாடகைக் குடியிருப்பாளர்களுடன் தொலைபேசிவழி நேர்காணல்களை மேற்கொள்ளுதல் போன்ற வசதிகளைப் பயன்படுத்துமாறு கியூபெக் அரசாங்கம் பரிந்துரைக்கிறது.** குத்தகைகளில் மின்னணுக் கையொப்பம் இடப்படலாம் அல்லது அவை தபாலில் அனுப்பப்படலாம்.

**வேறு மாற்று வழி ஏதும் இல்லாமல் நீங்கள் நேரில் சென்று பார்வையிட வேண்டியிருந்தால்,** பார்வையாளர்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்றோ அல்லது அதற்கான அறிகுறிகளோ இருக்கக் கூடாது. அவர்கள் கடந்த 14 நாள்களில் கோவிட்-19 பெருந்தொற்று பாதித்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கக் கூடாது, அல்லது கடந்த 14 நாள்களில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களாக இருக்கக் கூடாது.

**பின்வரும் நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட வேண்டும்:**

**பார்வையிடலுக்கு முன்**

- வீடு பற்றிய தொடர்புடைய தகவல்கள் அனைத்தையும் தெரிவிக்குமாறு வீட்டின் உரிமையாளரிடம் கேட்கவும்.
- வீட்டிற்குள் நுழையும் ஒவ்வொருவரும் **தங்கள் கைகளைக் கழுவ வேண்டும், சுவாச சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 2 மீட்டர் இடைவெளியைப் பராமரிக்க வேண்டும்.**

**பார்வையிடலின் போது:**

- வீட்டில் ஒரு நேரத்தில் ஒரே ஒரு பார்வையாளர் (குடும்ப உறுப்பினர்) மட்டுமே இருக்க வேண்டும்.
- அத்தியாவசியமான அறைகளை மட்டுமே பார்வையிடவும். பார்வையிடலை முடிந்தவரை சுருக்கமாக முடித்துக்கொள்ளவும்.
- வீட்டில் உள்ள எந்தப் பரப்புகளையும் அல்லது பொருள்களையும் தொடக் கூடாது.
- மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 2 மீட்டர் இடைவெளியைப் பராமரிக்கவும்.

**ஒவ்வொரு பார்வையிடலுக்குப் பின்னரும்:**

- சாத்தியமிருந்தால் உங்கள் கைகளை சோப்பு போட்டுக் கழுவவும், அல்லது ஆல்கஹால் சேர்த்த ஹேண்ட் சானிடைசர் போட்டுக் கழுவவும்.
- வீட்டில் உள்ள கதவின் கைபிடிக் குமிழ்கள் அனைத்தையும் கிருமிநாசினியால் சுத்தம் செய்யவும்.




**பார்வையிடல்கள் எதுவும் நடக்கக் கூடாது, வீட்டில் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கு பின்வரும் சூழ்நிலைகளில் ஏதாவது ஒன்று பொருந்தினால்:**

!

- ✓ கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பின் காரணமாக வாடகைக்குக் குடியிருப்பவர் சுய தனிமைப்படுத்தலில் இருக்கிறார்.
- ✓ வாடகைக்குக் குடியிருப்பவருக்கு கோவிட்-19 தொடர்பான அறிகுறிகள் உள்ளன (காய்ச்சல், இருமல், மூச்சு விடுவதில் சிரமம், குமட்டல், வாந்தி, தலைவலி, தசை வலிகள், வயிற்றுப்போக்கு, அதிகமான களைப்பு, வாசனை அல்லது சுவையுணர்வு இழப்பு).
- ✓ வாடகைக்குக் குடியிருப்பவர் கடந்த 14 நாள்களில் கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.
- ✓ வாடகைக்குக் குடியிருப்பவர் கடந்த 14 நாள்களுக்குள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு திரும்பியிருக்கிறார்.

## வளங்கள்

**சமூக மற்றும் சமுதாய வளங்கள்: தகவல் மற்றும் பரிந்துரைச் சேவைகளை: 2-1-1** என்ற எண்ணில் அழைக்கவும், இது 200-க்கு மேற்பட்ட மொழிகளில் கிடைக்கிறது, இது உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான சமுதாய அமைப்பு அல்லது சேவைக்கு உங்களை விரைவாக இட்டுச் செல்ல வேண்டும்..

**தகவல்-சாண்டி மற்றும் தகவல்-சமூகம்: அழைக்கவும் 8-1-1**

8-1-1 ஆனது 24/7 நேரமும் கிடைக்கின்ற ஒரு இலவச, இரகசிய தொலைபேசி ஆலோசனை சேவை ஆகும்.

இதனுடன் கூட்டாக:

CTI Centre des travailleurs et travailleuses immigrants
CRIC Carrefour de ressources en interculturel
SHERPA Recherche. Immigration. Société
CERDA www.cerda.info
Centre intégré universitaire de santé et de services sociaux du Centre-Sud-de-l'Île-de-Montréal Québec
TCRI Table de concertation des organismes au service des personnes réfugiées et immigrantes
ACCÉSSS Alliance des Communautés Culturelles pour l'Égalité dans la Santé et les Services Sociaux
Médecins du Monde
Montréal